1990 ஆகஸ்ட் 21]

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வாரியத்திற்குப் பணம் ஒப்படைக்கப்பட்ட பிறகும் குடிநீர் வடிகால் வாரியம் இந்தத் திட்டத்தைச் செயல் படுத்தாததன் காரணமாக ஆண்டுதோறும் இந்தச் சிறைக்குக் குடிநீர் சப்ளை செய்ததற்காக லாரிகளுக்கு பல இலட்சக் கணக்கான ரூபாய் செலவு ஏற்பட்டிருக்கிறது. இது வீண் நஷ்டம் என்றும் தணிக்கை அறிக்கை சுட்டிக் காட்டியிருக்கிறது. அதன் மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் செலுத் தப்பட்ட அந்த ரூ. 80 இலட்சம் தொகைக்கு வட்டியேனும் சிறைத்துறை பெற்றிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தணிக்கை அறிக்கையின் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கான அறிவிப்புகளை அரசு, இலாக்காவிற்குத் தெரிவித்திருக்கிறது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி ஜெயிலில் பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்பீட்டில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயங்கிக் கொண்டிருந்தது. தற்போது, இரண்டாண்டுக் காலமாக இயங்க வில்லை. அது பற்றி அரசுக்குத் தெரியுமா? அதை இயங்க வைப்பதற்குத் திட்டம் எதுவும் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது காவிரி ஆற்றிலிருந்து திருச்சி சிறைக்குத் தண்ணீர் வழங்க ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால் அதற்கான நடவடிக்கை தீவிரமாக எடுக்கப்பட்டு வருகிறது. மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி பற்றிய குறிப்பு இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சேகரித்துத் தெரிவிக்கப்படும்.

தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

* 8105 திரு. எம். முகமது சித்திக் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) மயிலாடுதுறையைத் தலைமை இடமாகக் கொண்டு வள்ளியம்மை மாவட்டம் என பெயரிடப்படுமா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தை மூன்றாக பிரிக்க முந்தைய அரசால் முடிவெடுக்கப்பட்டது. இன்றைய அரசு இதைப்பற்றி இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை.

(ஆ) இத்தகைய செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

9–25 மணி)

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் கீழ்த்தஞ்சைப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாகும். இப்போது பெரும்பாலான மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு விட்டன. அதைப் போல தஞ்சை மாவட்டத்தையும் பிரிக்க வேண்டுமென்று தஞ்சை மாவட்டத்தில் உள்ள மக்கள் எல்லாம் மிகவும் ஆவலாக உள்ளார்கள். மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி வந்தவுடன் நிச்சயமாக மாவட்டம் பிரிக்கப்படும் என்ற ஆவல் இருக்கிற காரணத்தால் விரைவில் அந்த மாவட்டத்தைப் பிரிப்பதற்குத் திட்டங்கள் வகுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்ட மக்கள் பெற்றிருக்கிற ஆவலுக்கு எனது பாராட்டு. புதியதாக ஒரு மாவட்டத்தை உருவாக்க அரசுக்கு தொடரினச் செலவாக நான்கு கோடி ரூபாயும், தொடரா இனச் செலவாக பதினைந்து கோடி ரூபாயும் ஏற்படும் என்பதால் இந்தப் பிரச்சினையைப் பற்றி முடிவெடுக்கவில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

குளத்தூர் பகுதியில் அரசு ஊழியர்களுக்கு வீட்டு மனை வழங்குதல்.

***10246 திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் :**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) சென்னை பெரியார் நகரை அடுத்துள்ள குளத்தூர் பகுதியில் அரசு ஊழியர்களுக்கு வீட்டு மனை வழங்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

(ஆ) எப்போது வீட்டு மனை வழங்கப்படும் ?

(இ) எந்த அடிப்படையில் வழங்கப்படும் ?